1993 ஏப்ரல் 22]

422--

சேரன்மகாதேவியில் புதிதாக மகளிர் உயர்நிலைப்பள்ளி தொடங்குதல்.

*10428—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவியில் மகளிர் உயர்நிலைப்பள்ளி புதிதாக தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மகாதேவி கல்வி வட்டம் என்பது மிகப்பெரிய கல்வி வட்டமாகும். அதிலே என்னுடைய தொகுதியான சேரன்மகாதேவியில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளியில் சுமார் 2,000 மாணவ-மாணவியர்கள் படிக்கிறார்கள். அதிலே இட நெருக்கடி காரணமாகவும், அது சேரன்மகாதேவி ஊரை விட்டு வெளிப்பகுதியில் இருப்பதன் காரணமாகவும், அந்தப் பகுதியில் கிராமப்புற பகுதிகள் அதிகமாக இருப்பதன் காரணமாகவும், அதிகமாக பெண்கள் உயர்கல்வி படிக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். இவைகளை கருத்திற்கொண்டு, குறிப்பாக அந்தப் பள்ளியினுடைய இடநெருக்கடியைக் கருத்திற்கொண்டு, மகளிருக்காக ஒரு தனிப் பள்ளிக்கூடம் அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஊரில் உயர்நிலைப் பள்ளி அமைக்க வேண்டுமென்றால் அங்கேயிருந்து ஒரு கருத்துரு அனுப்பப்பட வேண்டும். அங்கேயிருக்கிற பொதுமக்கள் தங்களுடைய பங்குத் தொகையைச் செலுத்த வேண்டும். இடத்தைக் காட்ட வேண்டும். இப்படிப்பட்ட எதுவுமே இது வரையில் செய்ததாகத் தெரியவில்லை. ஆகவே, அதற்கான ஏற்பாட்டை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலில் செய்ய வேண்டும்.

[1993 ஏப்ரல் 22

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல அந்த ஊரின் உட்பகுதியில் இடத்தைக் கொடுக்க அங்கேயுள்ள தனவந்தர்கள் முன்வந்திருக்கிறார்கள். அதைக் கொடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். அதேநேரத்தில் ஒரு தொகுதிக்கு ஒரு பாலம் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்ததைப்போல, ஒரு தொகுதிக்கு ஒரு மகளிர் உயர்நிலைப்பள்ளி என்ற ஒரு புதிய திட்டத்தை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற ஆண்டில் ஆரம்பிக்கப்பட இருக்கிற உயர்நிலைப் பள்ளிகளில் இதுவும் ஒரு உயர்நிலைப் பள்ளியாக வர வேண்டுமென்றால், அதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். அப்போதுதான் நாம் அந்த உயர் மட்டக் குழுவினிடம் இவைகளையெல்லாம் வைத்து ஆய்வு செய்யச் சொல்ல முடியும். மற்றபடி எல்லா தொகுதிகளிலும் ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பிப்பது என்பது ஒரு நல்ல எண்ணத்தின் அடிப்படையில் சொல்லப்படுகிற யோசனை என்கிற அளவில் அரசு அதை கவனத்தில் எடுத்துக் கொள்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 423, திரு. கே. பி. ராஜு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

423—

பள்ளி மாணவ, மாணவியருக்கு சீருடைகள் மாற்றல்.

*15283—திரு. கே. பி. ராஜு:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவியருக்கு சீருடைகளை மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர். செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்.:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாண்புமிகு புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பள்ளிகளில் 1 முதல் 8 வகுப்பு முடிய பயிலும் சிறார்களுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டம் மட்டுமே நடைமுறையில் உள்ளது. இது தவிர இந்தச் சீருடைகள் மாற்றும் செயற்குறிப்பு தும் தற்போது இல்லை.

TRUTH ALONE TRIUMPHS